[5th March 1966

பிறகு மற்றவர்களை எல்லாம் உள்ளே அனுப்பியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமாக போலீசார் மிரட்டவில்லை என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் தொழிற்பயிற்சிப் பள்ளி

*179 **கேள்வி—திரு. எல். ஆனந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) கள்ளக்குறிச்சியில் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியை **(Industrial Training Institute)** ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வேலூர்-காஞ்சீபுரம் புதிய இருப்புப்பாதை

*180 **கேள்வி—திரு. ர. ஜீவரத்தினம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வேலூரிலிருந்து ஆர்க்காடு, செய்யாறு வழியாக காஞ்சிபுரம் வரை புதிய இருப்புப்பாதை போட ரயில்வே இலாகாவில் சர்வே செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்த வேலையை நான்காவது திட்ட காலத்தில் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்துள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes. The information available with the Government is that a traffic survey was conducted in the year 1956 by the Southern Railway for the construction of a new railway line from Vellore to Kancheepuram but the route was found to be unremunerative.

(*b*) No.

திரு. து. ப. அழகமுத்து : நான்காவது திட்டத்தில் எந்தெந்த ரெயில்வே பாதைகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன ? எதற்கு முன் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் சபாநாயகர் : இது பொதுவான பிரச்சினை.

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு மாவட்டத்தில் மேற்கு நோக்கிச் செல்லுகிற ரெயில் பாதையையும் கிழக்குக் கரையோரமாகச் செல்லுகிற ரெயில் பாதையையும் இணைக்கும் வகையில் திண்டிவனம், வந்தவாசி, திருவந்தியபுரம், ஆற்காடு ராணிப்பேட்டை, அம்மூர் இவ்விடங்கள் வழியாக ஒரு புதிய ரெயில்வே